# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித் தாளாகப் பதிவு பெற்றது)


> எந்த மதத்திற்கும் உயிர்நாடியாக இயற்கைப் பண்பாக அமைந்துள்ளது செபம். மதத்தை முற்றும் ஏற்றுக்கொள்ளாத மனிதன் இவ்வையகத்தில் வாழமுடியாது; ஆகையால், செபம ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் மிக உன்னதமான இடத்தைப் பெற்றிருக்க வேண்டும்.
> —மகாத்மா காந்தி


96-ம் புத். | 1971-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 36-ம் இல


## சினொட் ஆராய்வுக் கருமங்கள் பற்றி ஆயர் சபையின் சிபாரிசு

இம்மாதம் ரோமாபுரியில் நடக்க இருக்கும் அகில உலக ஆயர் சினொட்டின் இலங்கை மேற்றிராணிமார் சபையின் ஏகபிரதிநிதியாக எமது கருதினால் அதிமேற்றிராணியார் கூறே அடிகளார் செல்லஇருக்கின்றார் என்பது ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. சில தினங்களுக்குமுன் கொழும்பில நடந்த இலங்கை மேற்றிராணிமார்சபையில சினொட்டில ஆராயப்பட இருக்கும் கருமங்களுள் முதலிடம் கிறீஸ்துநாதரின் பிரதிநிதிகளாக இருக்கும் அபிஷேகிக்கப்பட்ட குருமாரின் அந்தஸ்துக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும், இரண்டாவதாக நீதியும் சமாதானமும் இடம்பெற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குருத்துவத்தின் பொதுத் தன்மையில் சகல விசுவாசிகளுக்கும் பங்கு உள்ளதென்றும், ஆனால் அபிஷேகிக்கப்பட்ட குருத்துவத்துக்கும் பொதுக்குருத்துவத்துக்கும் உள்ள வித்தியாசம் யாவராலும் விளங்கிக்கொள்ளப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டது.

## மரியாயின்சேனை யூபிலிதினத்தில் ஸ்தாபகரின் செய்தி

1921-ம் ஆண்டு மரியாயின் சேனையை நிறுவிய திருவாளர் பிரங்க் டவ் எனப்படும் பெரியார் இங்கிலேயத்தின் 50 ஆண்டு நிறைவின்போது சேனையிலுள்ளவர் யாவருக்கும் பிறருக்கும் விடுத்துள்ள செய்தியில் சேனையைப்பற்றிய சில உண்மைகளை ஞாபகப்படுத்தியிருக்கின்றார். அவை:

● தேவதாயாரை சாமானிய மக்களுக்கு விளக்கி வைக்க சேனை உதவியிருக்கின்றது. தேவதாயார் பரிசுத்த ஆவியின் உதவியாளர் ஆகவே தேவநற்கருணைநாதரின் தாயாராகத் தெரிந்தெடுக்கப்பட்டாள். சகல வரப்பிரசாதங்களும் அவள் மூலமாகவே நமக்குக்கிடைக்கின்றன. இப்போதனையே சேனையின் பெரும்பாக்கியம்.

● சேனையின் மூலம் மனிதர் பல ஆறுதல்களைப் பெற்றிருக்கின்றனர்.

● சென்ற காலத்தில் நடந்த நன்மைகள் போதாது. வருங் காலத்திலும் ஊக்கமாகச் சேவை செய்ய வேண்டும். வருங்கால வேலைகள் முன்னிலும் கடுமையானவை.

● இரட்சணியவேலை அவசரமானது. தூங்கிநிற்க நேரமில்லை.

● தேவனது கட்டளையைச் செய்து முடிப்போம். "உலகத்தின் எத்திசைக்கும் போய் எமது சுவிசேஷத்தைப் போதியுங்கள்."

● எமது முயற்சிகள் யாவற்றிலும் எமக்கு கண்ணுக்குத் தோன்றும் ஒரு தலைவர் உளர். அவரே பாப்பரசர். அவர்மேலே திருச்சபை கட்டப்பட்டிருக்கின்றது.

## அம்பிற்றியா குரு மாணவர் கல்லூரி பரிபாலன மாற்றம்

சென்ற பலவருடங்களாக கண்டிப்பகுதியில் அம்பிற்றியாவில் இருந்துவந்த குருமாணவர் உயர்பயிற்சிக்கலாசாலை அமலோற்பவ தியாகிகளின் சபையினரால் நடத்தப்பட்டு வந்துள்ளது. ஆனால், விரைவில் அது அகில இலங்கை மேற்றிராணிமார் சபையினரால் பரிபாலிக்கப்படவேண்டுமென்று ஆயர் சபை முடிவு செய்திருக்கின்றது. அங்கு கல்வியூட்டும் குரு ஆசிரியர்கள் இந்நாட்டில் தொண்டுசெய்யும் பல சந்நியாசசபைக் குருமாருள்ளும் சந்நியாசசபைச் சகோதர குருமாருள்ளும் ஆயர் சபையினரால் தெரிந்தெடுக்கப்படுவர்.

## உறுதிப்பூசுதல் திருச்சடங்கில் சில மாற்றங்கள்

உறுதிப்பூசுதல் திருச்சடங்கில் சில மாற்றங்களைப் புகுத்த முடிவு செய்திருப்பதாகப் பரிசுத்த தந்தை சென்றவாரம் அறிவித்திருந்தார். மெய்விவாகத் திருச்சடங்கு திருப்பலி நேரத்தில் நடப்பது போலவே உறுதிபூசுதல் திருச்சடங்கு திருப்பலியின் முன்னோ பின்னோ நடவாது திருப்பலியின்போதே நடைபெறும். உறுதிப்பூசுதல் பெற்றுக்கொள்பவர்கள் பகிரங்கமாக ஞானஸ்நான வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்துக் கொள்ளுவார்கள். மேற்றிராணியாருக்குத் துணையாக குருமாரும் அச்சடங்கில் பங்குபெறநியமிக்கப்படலாம்.

## தனியார் பள்ளிக்கூடங்களுக்கு நீதி இன்னும் கிடையாதா?

சென்றவாரம் கொழும்பு சென் ஜோசவ் கல்லூரியின் இவ்வருடப் பரிசளிப்பு விழா அதிமேற்றிராசன அவை ஆயர் எட்மண்ட் பெர்ணாந்து அடிகளாரின் தலைமையில் நடந்தபோது தலைவர்சுவாமியார்டொன் பீற்றர் அவர்கள் வாசித்த வருடாந்த அறிக்கையில், அப்பள்ளிக்கூடத்தின்நிலைமையைப் பற்றிப் பல விபரங்கள் அறிவித்தார். "சென்ற 10வருடங்களும் பணநிலையைப் பொறுத்த வகையில் பெருந் திண்டாட்டமான காலமாய் இருந்தது. சென்ற 10வருட காலமாக இந்நாட்டை ஆண்டுவந்த பல அரசாங்கங்களையும் தனியார் பாடசாலைகளுக்குச்செய்யப்பட்டிருக்கும் அநீதியை அகற்றும்படி விண்ணப்பித்திருந்தும், இன்னும் பயனளிக்கவில்லை. இன்று இருக்கும் அரசாங்கம் பல அநீதிகளை அகற்ற அநேக துணிகரமான செயல்களை ஆற்றியிருப்பதால் தனியார் பாடசாலைகளுக்கு அதற்குரிய கட்டணத்தை நியாயமான முறையில் மாணவரிடமிருந்து பெற்றுக்கொள்ள இடமளித்தோ அல்லது செலவுக்குத்தக்க மானியத்தைக் கொடுத்தோ நீதிசெய்யுமென எதிர்பார்க்க முடியாதா" என அதிபர் சுவாமியார் கேட்டிருக்கின்றார்.

## இலங்கைக்குப் பாப்பரசர் அளித்த பணம் செலவாகும் திட்டம்

சென்ற வருடம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, 20,000 ஐக்கிய அமெரிக்க தேச டொலர் பெறுமதியான பணம் அன்பளிப்புச் செய்திருந்தாரல்லவா? இப்பணத்தை குஷ்டரோகிகளின் நிவாரணத்துக்காகச் செலவுசெய்ய வேண்டுமென்று பொதுவான முறையில் குறிப்பிட்டிருந்தது. அப்பணத்தைக் குஷ்டரோகிகளின் நிவாரணத்துக்காக எவ்வாறு செலவு செய்ய வேண்டுமென்று, உதவி சுகாதார அமைச்சர் திருமதி சிவஒபசேகர அம்மையார் உட்பட நியமிக்கப்பட்ட குழுவினர் முடிவு செய்திருக்கின்றனர். குஷ்டரோகிகளின் சிகிச்சைக்கு அவசியமான போக்குவரத்து வாகனங்கள் நான்கு வாங்குவதற்கு 52,000 ரூபாவும், மான்நிவு குஷ்டரோக சாலைக்குப் போக்குவரவு செய்யத்தக்க நீராவிப்படகு ஒன்றுக்கு 9,000 ரூபாவும், தண்ணீர் விநியோக திட்டமொன்றுக்கு வேண்டிய பணமும் இதிலிருந்து ஒதுக்கப்படும். "பாப்பரசரது அன்பளிப்பு" என்னும் சின்னம் அவர் பணம் செலவு செய்யப்படும் பொருள்களில் பொறிக்கப்படும்.

### பாப்பரசரின் ஆபிரிக்க உதவி நிதி

பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் ஆபிரிக்கதேச மனிதாபிமான கிறிஸ்தவ தேவைகளுக்கென ஒரு விசேஷ நிதியை ஆரம்பித்திருக்கின்றார். இந்நிதி எவ்வளவு தொகைப்பணத்துடன் ஆரம்பமானது என இன்னும் அறிவிக்கப்படவில்லை. எனினும் சில காலத்துக்கு முன் தென் அமெரிக்கவறிய நாடுகளுக்கென அவர் ஆரம்பித்தநிதி ஒரு கோடி டொலர் தொகையுடன் தொடங்கியது. ஆபிரிக்க உதவிநிதியின் தகவலைச் சென்ற வாரம் பரிசுத்த தந்தையின் அரசகாரியதரிசிக் கருதினல் விலோ அடிகளால் அறிவித்திருந்தார். பிரதேச மேற்றிராணிமார்களும் தனவந்தர்களும் அந்நிதிக்குத் தம்மால் கூடியளவு கொடுக்குமாறு தூண்டப்பட்டிருக்கின்றனர். அந்நிதியிலிருந்து உதவி பெறவிரும்புபவர்கள்வத்திக்கான் அரசகாரியதரிசிக் கருதினல் அவர்களுக்கே விண்ணப்பிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

### சினோட்டில் ஆலோசகர்களாக பெண்களும் நியமனம்

சென்ற வாரம் பரிசுத்த தந்தை தமது கோடைகால வாசஸ்தலமாகிய காசில் கான்டொல்பாவில் அளித்த பகிரங்கப் பேட்டியில் அண்மையில் நடக்க இருக்கும் ஆயர் சினொட்டில் பெண்பாலாரும் ஆலோசகர்களாக இருப்பார்கள் என்று அறிவித்தார், எத்தனை பேர் எனக் குறிக்கப்படாவிட்டாலும் குறைந்தபட்சம் இருவராகுதல் கடமையாற்றுவர் என நம்பப்படுகிறது. 'சினொட்' ஐப்பசிமாதம் முழுவதும் வேண்டுமானால் அதற்குப் பின்னும் நடைபெறும் என விஷயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. பொதுநிலை மக்களில் தெரியப்படும் ஆலோசகர்கள் உலக நீதி என்னும் விஷயத்தில் வேண்டிய உதவி செய்வார்கள்.

### தேவ அழைத்தலில் தோன்றிய மந்தநிலை படிப்படி நீங்கிவருகின்றது

அண்மையில் யேசுசபைத் தலைவர் பேதுரு அருப்பே அடிகளார் உலக நிலையை நன்கு ஆராய்ந்ததன்பின் தேவ அழைத்தலில் சிறிது காலமாகத் தோன்றியிருந்த மந்தநிலை விரைவில் அகன்று

(மறுபக்கம் பார்க்க)

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

# மறைக்கல்விப் பரீட்சை

## மாதிரி வினாக்கள்

## 5ஆம் வகுப்பு

நேரம்: 1 மணி.

1: கீறிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களிட்டு நிரப்புக.

(அ) நாம் ஞானஸ்நானம் பெற்றபோது — — விடுதலை அடைந்தோம்.
(ஆ) நோயிற் பூசுதலால் நாம் — மனத்திடனும், சிலவேளைகளில் — நலமும் பெறுகிறோம்.
(இ) நாம் நற்செயல் செய்வதால் இவ்வுலகில் கடவுள் — மறுவுலகில் — பேரின்பத்தையும் பெறுவோம்.
(ஈ) குருவானவர் ஒப்புக்கொடுத்த ஒஸ்தியப்பமானது வசீகரத்தின் பின் — — ஆக மாறுகின்றது.
(உ) மூன்றும் துக்க தேவ இரகசியம் — — சூட்டப்பட்டது.

2. சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் எழுதுக.
(அ) கடைசி நாளில் நடக்கும் தீர்ப்புக்கு பொதுத் தீர்ப்பு என்று பெயர், ( ... )
(ஆ) யேசுநாதர் பாவிகளை இரட்சிக்க வந்தார் ( ........ )
(இ) நற்செய்தி மோசேசின் சரிதையைக் கூறுகிறது ( ...... )
(ஈ) நாம் பாவ மன்னிப்பை விசுவசிக்கக் கூடாது. ( ........... )
(உ) கர்த்தர் பிறந்த திருநாளை மார்கழி 8ஆம் திகதி கொண்டாடுகின்றோம் (... .......... )

3: பின்வருவன யாரால் யாருக்குக் கூறப்பட்டது|
(அ) "யூதர்களின் இராசாவே வாழ்க."
(ஆ) "இவரே என் அன்புள்ள மகன்."
(இ) "உங்களுக்குச் சமாதானம் என்றார்,"
(ஈ) "ஆண்டவர்தான் நிற்கிறார்."
(உ) "இஸ்ராயேல் மக்களே! நாம் சொல்வதைக் கேளுங்கள்."

4: அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.
(அ) யேசுநாதர் சிறுவர்களை (ஆசீர்வதித்தார், துரத்தினார், பராமுகஞ் செய்தார்)
(ஆ) உன் தாயையும் தந்தையையும் (தூற்றிநட, கனம்பண்ணிநட, கவனியாதுநட)
(இ) நாம் எல்லோரையும் (நேசிக்க வேண்டும், பகைக்கவேண்டும். விலக்க வேண்டும்.)
(ஈ) கடவுளில் நமக்குள்ள விசுவாசத்தைக் காட்ட (பரலோக மந்திரம், விசுவாசப்பிரமாணம், திரித்துவ தோத்திரம்)
(உ) புனித இராயப்பருக்குப் பதிலாக தற்போது திருச்சபையை ஆள்பவர் (12-ம் பத்திநாதர், 6-வது சின்னப்பர், 7-வது கிரகோரியார்)

5. பின்வருவனவற்றிற்கு ஒரு சொல்லில் விடை எழுதுக.
(அ) யேசுநாதரின் சிலுவையைச் சுமக்க உதவி செய்தவர் ?...
(ஆ) பாவப்பொறுத்தல் அடைய நாம் பெறும் தேவ திரவிய அனுமானம் ?...
(இ) ஆங்காரத்திற்கு எதிரான புண்ணியம் ?......
(ஈ) கடவுளுக்கு எதிரான மாபெரும் துரோகச் செயல் ? ...
(உ) யேசு என்னும் பெயரின் பொருள் ?..............

6. "அ" பகுதிக்குப் பொருத்தமான சொல்லை "ஆ" பகுதியிலிருந்து தெரிந்தெடுத்து. அதன் இலக்கத்தை "அ" பகுதியுடன் இணைத்து எழுதுக.

| அ | | ஆ |
|---|---|---|
| (அ) உண்மையாகவே இவர் கடவுளின் மகன்தான். | ( ) | 1. பொதுத்தீர்வை. |
| (ஆ) உலக முடிவில் நடக்கும் தீர்வை. | ( ) | 2. யூதாஸ்கரியோத், |
| (இ) யேசுவைக் காட்டிக் கொடுத்தவன். | ( ) | 3. மனிதன், |
| (ஈ) உங்களுக்குச் சமாதானம் என்றார். | ( ) | 4. படைத்தவன். |
| உ) கடவுள் தமது சாயலாகப் படைத்தார். | | 5. யேசுநாதர். |

7: பின்வரும் சொற்கூட்டத்தில் பொருத்தமான சொற்களின் கீழ்க்கீறிடுக.
(அ) பாப்பானவர், மேற்றிராணியார், பங்குக்குரவர், தொண்டர்.
(ஆ) செபம், தருமம், உணவு, தபம்
(இ) புனித இராயப்பர், ஆரும் சின்னப்பர், புனித அந்தோனியார், புனித யாசப்பர்.
(ஈ) பிரவேச வாக்கியம், காலைச்செபம், காணிக்கைச் செபம், வசீகரவார்த்தை.
(உ) தாழ்மை, ஈகை, சோம்பல், பொறுமை.

# மறைக் கல்விப் பரீட்சை 1971.

## நான்காம் வகுப்பு

நேரம் 1 மணி.

## மாதிரி வினாப்பத்திரம்

1. பின்வருவன சரியாயின் √ என்றும் பிழையாயின் × என்றும் குறிப்பிடுக:
(அ) ஆபிரகாமின் மகன் பெயர் ஏசாயூ ( )
(ஆ) தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் தலைவர் மோயீசன் ( )
(இ) யோசேப்பை அவரது சகோதரர் 20 வெள்ளிக்கு விற்றார்கள் ( )
(ஈ) கத்தோலிக்க திருச்சபையை ஏற்படுத்தியவர் இராயப்பர் ( )
(உ) காயின் ஆபேலைக் கொன்றான். ( )
(ஊ) யேசு 30 வயது மட்டும் தந்தை தாய்க்கு அமைந்துவந்தார் ( )
(எ) யாக்கோபுக்குப் பதினொரு புதல்வர்கள் இருந்தார்கள் ( )
(ஏ) முதற்கொலை உண்டாகக் காரணம் பொறாமை ( )
(ஐ) திவ்விய பாலனை முதல் முதல் ஆராதித்தவர்கள் இடையர்கள் ( )
(ஒ) ஜலப் பிரளயத்தினின்றும் காப்பாற்றப்பட்டவர் யாக்கோபு ( )

2. ஒரு சொல்லில் விடைதருக:
(அ) பூமியிலுள்ள கடவுளின் இராச்சியத்தை எப்படி அழைக்கிறோம் ...................
(ஆ) திருச்சபையின் தலைவர் யார் ....... ... ......
(இ) மேற்றிராணிமாருக்கு அவர்கள் அலுவல்களில்யார் துணையாயிருக்கிறார்கள் ..... .........
(ஈ) யேசு தமது திருச்சபையின் முதல் தலைவர்களாக யாரைப் பயிற்றினார் ...........
(உ) தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் தந்தை யார்? ...............

3. கீறிட்ட இடங்களை நிரப்புக:
(அ) யேசுநாதர்.......... நதியில் ஸ்நாபக அருளப்பர் கையால்..... ..... பெற்றார்.
(ஆ) யேசுக்கிறிஸ்து.......என்பதை அவரது சொல்லாலும் ........அறிகிறோம்.
(இ) யேசுநாதர்.........வயதில் ......இல் காணாமற் போனார்.
(ஈ) கடவுளால் .......சீனாமலையில் ..........கொடுக்கப்பட்டது.
(உ) யேசுநாதர்........ நாட்டில் ......நகரில் பிறந்தார்.

4. பின்வருவன யாரால் கூறப்பட்டது?
(அ) "நம் சகோதரனைக் கொல்வதால் என்ன பயன்; அவனை விற்று விடுவோமே."
(ஆ) "அஞ்ச வேண்டாம், ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார்"
(இ) "இந்தத் தீயகாரியத்தைச் செய்து கடவுளுக்குத் துரோகம் செய்ய மாட்டேன்"
(ஈ) "நீர் இங்கு இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்"
(உ) "அருள் நிறைந்தவளே வாழ்க; கர்த்தர் உம்முடனே"

5. பின்வரும் இலக்கங்களைப் பொருத்தமாகப் போடுக:
6, 12, 7. 10, 33.
(அ) தேவதிரவிய அனுமானங்கள் (..... )
(ஆ) திருச்சபைக் கட்டளைகள் (... .... )
(இ) யேசுவின் சீடர்கள் (...... )
(ஈ) தேவ கற்பனைகள் (........)
(உ) யேசு இவ்வுலகில் சீவித்த வருடங்கள் (........)

6சரியான சொல்லின் கீழ் கீறிடுக:
(அ) யேசு பெத்தானியாவுக்கு வந்தபோது லாசரால் அடக்கம் பண்ணப்பட்டு (மூன்று, இரண்டு நான்கு) நாட்களாயின.
(ஆ) யேசு உயிர்த்தபின் இவ்வுலகில் (நாற்பது, ஐம்பது, பத்து,) நாட்கள் இருந்தார்.
(இ) கர்த்தர் கற்பித்த செபம் (பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, அருள் நிறைந்த மரியாயே, மிகவும் இரக்கமுள்ள தாயே) என்று தொடங்குகின்றது.
(ஈ) யேசுவின் எதிரிகள் அவர்மேல் கொண்ட (அன்பினால் காய்மகாரத்தினால், இரக்கத்தினால்) அவரைக் கொல்ல விரும்பினார்கள்.
(உ) திருக் குடும்பம் (பெத்தானியாவில், ஜெருசலேமில், நசரேத்தூரில்) வசித்தது.

7. பூசைப்பலி வேளையில் நீர் மனமுவந்து கொடுக்கக்கூடிய காணிக்கைப் பொருள்கள் மூன்று கூறுக.

8. பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.
(அ) நாம் எவ்வாறு செபம் செய்யவேண்டும்?
(ஆ) நன்மை வாங்குவதற்கு நம்மிடம் என்ன தேவை?
(இ) மூன்றாவது மகிமைத் தேவ இரகசியம் எது?
(ஈ) பாவசங்கீர்த்தனத்துக்கு அவசியமான காரியங்கள்?
(உ) நீர் அடிக்கடி பெறக்கூடிய தேவதிரவிய அனுமானங்கள் எவை?

# 'கிறிஸ்தவ ஒளி விழா'

கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலையில், "கிறிஸ்தவ ஒளிவிழா" 4-10-71 திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில சம்பத்திரிசியார் கல்லூரிஅதிபர் வண. பிதா றி. ஏ. ஜே. மதுரநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெறும். கலாசாலை அதிபர் உயர்திரு ஈ. சி. வேலாயுதபிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துவார். திருப்பலி மூன்று குருமாரால் நிறைவேற்றப்படும். பின்பு வண. பிதா ஜெயசீலனின் பேச்சுடன் பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

எவ். சீ. வேதநாயகம்,
கிறிஸ்தவ மன்ற உறுப்பினன்,
ஆசிரிய கலாசாலை.

**தேவ அழைத்தல்......**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தேவ அழைத்தல் மறுமலர்ச்சி அடையும் காலம் அண்மித்திருக்கின்றது என்று கூறினார். புள்ளிவிபரங்கள் அவரது கூற்றின் உண்மையைக் காட்டுகின்றன. ஆங்கிலநாட்டில் சல்பட் மேற்றிராசனத்தில் குருமாரின் மேற்படிப்புக்கு வருகிற மாதம் 17 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஆங்கிலநாட்டுப் பத்திரிகைகளின் செய்திகள், அங்கே வாலிபபருவம் தாண்டிய மக்களினிடையே தேவ அழைத்தலுக்கு விசேஷ ஆர்வம் தோன்றியிருக்கின்றதெனவும் கூறுகின்றன.

✠

கை இம்மனுவேல் சவுந்தரநாயகம் துரையாவின்

## 6ஆம் மாத மரண ஞாபகம்

தோற்றம்: 20-11-1930. மறைவு: 7-4-1971.

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் எதிர்வரும் ஐப்பசி 1-ம்திகதி வியாழக்கிழமை 6-15 மணிக்கு ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும. அவ்வமயம் உறவினர், நேசகர், கன்னியாஸ்திரிமார், குருமார்பக்தியுடன் வருமாறு வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
தாய்—சகோதரர்.

**நன்றித் துதிகள்**

திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், பரி. தேவதாயார், பரி. சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார் இவர்களிடம் நான் விடாப்பிடியாக பதினொரு வருடகாலமாகக் கேட்டுவந்த வரம் கிடைத்தமைக்கு, அவர்கட்கு என் நன்றித்துதியைத் தெரிவிப்பதுடன், நேர்த்தியின்படி இதை பிரசுரிக்கின்றேன்.

புத்தளம். ஓர் அடியான்.

* * *

யேசுவின் இரக்கத்தாலும், சதாசகாயமாதாவின் மன்றாட்டினாலும் நான் கேட்ட உதவியை பன்மடங்காகப் பெற்றேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கக் காலம் தாமதித்தமைக்காக வருந்துகிறேன்.

சதா சகாயமாதாவின் அடியான்.

# செய்திகள்

## இரத்த வங்கியின் குறைபாடு

இலங்கையிலுள்ள சகல ஆஸ்பத்திரிகளுக்கும் வருடம் ஒன்றுக்கு 70 ஆயிரம் பைந்து — அதாவது மாதம் ஒன்றுக்குச் சுமார் 6 ஆயிரம் பைந்து இரத்தம்தேவைப்படுகின்றது. ஆனல் வருடம் ஒன்றுக்குக் கிடைக்கும் இரத்தம் 40 ஆயிரம்— அதாவது மாதம் ஒன்றுக்குச் சுமார் 3,400 பைந்து மட்டுமே. கொழும்பிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு மட்டும் நாள்ஒன்றுக்கு 100 பைந்து இரத்தம் தேவைப்படுகின்றது. ஆனல், கொழும்புப் பெரிய ஆஸ்பத்திரி இரத்த வங்கி 50பைந்து இரத்தமாவது பெற்றுக்கொள்வதில்லை. இரத்ததானம் செய்யும்படி நாடெங்கும் பிரசாரம்செய்து வந்த போதிலும் தேவைப்படும் இரத்தம் கிடைப்பது அரிதாய் இருக்கிறது.

## தணிக்கைப் புதிய உத்தரவு

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டிருக்கும் ஒரு கட்டளைப்படி இராணுவத்தினர் அல்லது பொலிசார் சம்பந்தப்பட்ட அவசரகால நிலைபற்றிய எந்தவழக்கு விசாரணைகளையும் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியின்றிச் சென்ற 18-ம்தேதி முதல் பத்திரிகைகள் பிரசுரிக்க முடியாது.

## புதிய விமானப் படைத்தளம்

யாழ்ப்பாணத்திலே விமானம் படைத்தளம் ஒன்றுபுதிதாக அமைக்கப்படவிருக்கிறது. இதில் விமானப்படையைச்சேர்ந்த விமானங்கள் அமர்த்தப்படும். இங்குள்ள கடற் பகுதிகளைக்கவனமாகக் கண்காணிப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது. அதனல் கள்ளக்கடத்தல், கள்ளக் குடியேற்றம் ஆதியனவற்றை தடுக்கும்வேலைகள் தீவிரமாக்கப்படும். இதற்கென யாழ்ப்பாணத்தில் பலஹெலிகொப்டர் விமானங்களும் அமர்த்தப்படும்.

## அரசாங்கத்தின் புதிய நிபந்தனை

வெளிநாடுகளில் பயிற்சிக்காகச்செல்லும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பயிற்சியை முடித்துக்கொண்டுதிரும்பியதும் தாங்கள் முன்பு கடமையாற்றிய அரசாங்க பகுதிகளில் குறைந்தபட்சம மூன்று வருடங்களாவது தொடர்ந்து கடமையாற்ற வேண்டுமென்ற ஒரு புதிய நிபந்தனையை அரசாங்கம் விதித்திருக்கிறது.

## குறைகள்கேட்க ஒருநாள்

அடுத்த வருடத்திலிருந்து சனிக்கிழமைகளில் பாடசாலை நடைபெறமாட்டாது. அதனல் ஆசிரியர்கள் சனிக்கிழமைதோறும் தமமைச்சந்தித்துத் தங்கள் குறைமுறைகளை எடுத்துச்சொல்லலாமென்று வடமாகில வித்தியாதபதி திரு. டபிள்யு. டி. சி. மகாதந்திலா தெரிவித்து ஆசிரியர்களின்குறைமுறைகளைக்கேட்க ஒருதனிநாளைக் குறித்திருக்கின்ருர்.

## எதிர்ப்பு இயக்கம்

குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கத்தை எதிர்க்குமுகமாகத் தமிழ்ப்பகுதிகளிலே சுவரொட்டி இயக்கம் ஒன்றை நடத்த அகில இலங்கைத் தமிழ்த் தாய்மன்றம் முன்வந்திருக்கிறது. "குடும்பக் கட்டுப்பாடு" என்பது தமிழர் குலத்திற்கே கேடு." "கர்ப்பத் தடைஎன்பது தமிழரை அழிக்கும் படை" என்பன போன்ற பொய அளவிலான சுவரொட்டிகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலைநாட்டுப் பகுதிகளில் ஒட்டப்படவிருக்கின்றன. குடும்பக் கட்டுப்பாடு எதிர்ப்புக் கூட்டங்களையும் அங்கெல்லாம் நடத்துவதெனத்தமிழ்த்தாய் மன்றம் தீர்மானித்துள்ளது.

## கல்லூரி அதிபரின் நன்மதி

"இன்றைய நமது தமிழ் இளைஞர்கள் விவசாயத்திலோ அன்றேல் கைத்தொழில் துறையிலோ தமது நாட்டத்தைச் செலுத்த வேண்டுமே தவிர உத்தியோகத்தை எதிர்பார்த்திருப்பது புத்திசாலித்தனமாக அமையாது" என்று புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அதிபராகப் 18ஆண்டுகள் கடமையாற்றிச் சமீபத்தில் இளைப்பாறிய திரு. எஸ். குமாரசாமி தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை விழாவின் போது கூறியிருக்கின்ருர்.

## சமூகவியல் பாடம்

வருகிற 1972-ம்ஆண்டு முதல் பாடசாலை மாணவர்களுக்கு ஆறும்வகுப்பிலிருந்து குடியியல், சரித்திரம், பூமிசாஸ்திரம்ஆகிய பாடங்களைக் கற்பிப்பதில்லையென்றும், அவற்றிற்குப்பதில் சமூகவியலையே கற்பிப்பதென்றும் கல்வி அமைச்சு முடிவுசெய்திருக்கிறது. 1973ஆம் ஆண்டு 7-ம்வகுப்பிலும், 1974ஆம் ஆண்டு 8-ம் வகுப்பிலும் இம்மூன்று பாடங்களும கற்பிப்பது நிறுத்தப்படும். இவ்வாறு படிப்படியாக 1975ஆம ஆண்டுக்குள் சகல வகுப்புகளிலும் அவைகள் நிறுத்தப்பட்டுச் சமூகவியல்பாடம் கற்பிக்கப்படும். 1975ஆம் ஆண்டு முதன்முறையாக நடைபெறவிருக்கும் தேசியகல்வித் தாரதரப்பத்திர பரீட்சையிலே முதல் தடவையாகச் சமூகவியல் பாடமாயிருக்கும்.

## தபால் உறை பற்றிய எச்சரிக்கை

முத்திரை பொறிக்கப்பட்ட தபால உறைகளைத் தபாற்கந்தோர்களிலும், அங்கீகாரம் பெற்ற முத்திரை வியாபாரிகளிடமிருந்துமே வாங்குமாறு தபால் அமைச்சு வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறது. இதற்குக் காரணம் முத்திரை பொறிக்கப்பட்ட போலித் தபால்உறைகள் கள்ளத்தனமாகஅச்சிட்டுப் புழக்கத்திற்கு வந்திருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளமையே. அதனல தபால்உறைகள்வாங்குவதில எச்சரிக்கையாய் இருக்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

## சனி ஞாயிறு விடுமுறை

"சனியும், ஞாயிறும் கிறிஸ்தவர்களின் விடுமுறை நாட்கள் அல்ல; இந்த நாட்கள் சர்வதேச விடுமுறைத் தினங்களாகும். நாம் போயாதினங்களை விடுமுறை நாட்களாக அனுட்டித்தமையால் உலகமாக்கெற்றிலே நாம் வாரத்தில் இரு தினங்களில் வர்த்தகம்நடத்த முடியவில்லை; அதனலேயே நாம் சனி, ஞாயிறு தினங்களை விடுமுறை நாட்களாக மாற்றிக்கொண்டோம்" என்று நீர்ப்பாசன மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அடிகல் நாட்டுவிழா ஒன்றில் கூறியிருக்கின்ருர்.

## நெல் வழங்குவதில் மாற்றம்

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் உத்தரவாத விலைக்கு வாங்கப்படும் நெல்லை இனிமேல் அந்தப் பிரதேசத்திலேயே கூட்டுறவுக் கடைகள் மூலம் கூப்பனுக்கு வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனல் ஓரிடத்தில் நெல்லைவாங்கி வேருேர் இடத்துக்குக் கொண்டுசெல்வதால் ஏற்படும் செலவைக் குறைக்க முடியுமெனக் கருதப்படுகிறது.

## ரின்களில் இறைச்சி

பேசாலை ரின்மீன் தொழிற்சாலையில் இறைச்சியைப்பதப்படுத்தி ரின்களில் அடைப்பதற்கான பரீட்சார்த்த முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரியவருகிறது. அங்கு தற்போது இயங்கிவரும் மீன் தொழிற்சாலை வருடத்தில் குறைந்தபட்சம்நான்குமாதங்கள்வரை இயங்குவதில்லை.காரணம், தேவையானமீன் அம்மாதங்களில் கிடையாமையே. ஆகவே, ரின் இறைச்சி தயாரிக்கப்படுமானல வருடமுழுவதும்தொழிற்சாலை இயங்கக்கூடியதாயிருக்குமாம்.

## தக்காளிச் செய்கை

இந்தப்போகத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தக்காளிப்பழச் செய்கை குறைந்துவிட்டதாக அறியப்படுகிறது. அதனல் விவசாயிகளிடமிருந்து தேவைக்குப் போதிய தக்காளிப்பழங்களை வாங்கிக்கொழும்பிலுள்ள பழத்தொழிற்சாலைக்கு அனுப்ப முடியவில்லையென்று சொல்லப்படுகிறது.

## நெல் குத்துவதும் விற்பதும்

நெல்லைக் கொள்வனவுசெய்வதும், குத்தி அரிசியாக்குவதும், குத்திய அரிசியை விற்பனை செய்வதுமாகிய சகல அலுவல்களையும் அடுத்தவருடமுதல் நெற்சபைதான்செய்யும். அதனல் கூப்பனுக்குக் கொடுக்கப்படும் உள்நாட்டு அரிசியின்தரத்தைஉயர்த்துவதற்கும், நெல்லுக்கான உத்தரவாதவிலை விவசாயிகளுக்குத் தரகர்கள்மூலம் கிடையாது நேரடியாகக் கிடைக்கச் செய்வதற்கும் சபை நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

## குடிசன மதிப்பீடு

இலங்கைக் குடிசன மதிப்பீடு சென்ற 20-ந்தேதி திஙகட்கிழமை ஆரம்பமாகியுள்ளது. அன்றுமுதல் தொடர்பாக 30-ந்தேதிவரை நடைபெறும்.இம்மதிப்பீட்டுவேலைகளில் 53ஆயிரம் ஊழியர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள். இவர்களில் 50ஆயிரம்பேர் கணக்கெடுப்பாளரும், மூவாயிரம் பேர் மேற்பார்வையாளருமாவர். இவர்கள் தற்போது சகல இல்லங்களுக்கும், வேலைத் தலங்களுக்கும் சென்று கடமையாற்றி வருகிருர்கள். இலங்கையில் ஒழுங்காகநடைபெற்றுவந்த குடிசன மதிப்பீட்டின் 100-வது ஆண்டு இதுவாகும்.

## ஜி. சி. ஈ. விஞ்ஞானப் பரீட்சை

வருகிற மார்கழிமாதம் நடைபெறவிருந்த ஜி. சி. ஈ. உயர்தர விஞ்ஞானப் பரீட்சை வருகிற 1972ஆம்ஆண்டு சித்திரை மாதத்திற்குப் பின் போடப்பட்டிருக்கிறது. இனிமேல் கலை, விஞ்ஞானப் பரீட்சைகள் சித்திரை மாதத்திலேயே நடைபெறும். அடுத்த வருடமுதல விஞ்ஞான செய்முறைப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதனலேயே இவ்விரு பரீட்சைகளும் ஏககாலத்தில் நடத்தப்படவிருக்கின்றன.

## கல்மண் கலந்த நெல்

உத்தரவாத விலைக்கு அரசாங்கத்துக்கு விற்பனைசெய்யப்படும் நெல்லில் கல் மண் போன்ற கழிவுப்பொருள்கள் ஆறுசத வீதத்துக்குமேல் இருந்தால் குறைந்தவிலையே அதற்குக் கொடுக்கப்படவிருக்கிறது. தற்போது புசல் கணக்கில் வாங்கப்படும் நெல்லைக் கிறுமகணக்கில் வாங்கவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இதற்கென 2,000 தராசுகள் இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன.

## சீனவும் கடலட்டையும்

சீனவிலே கடலட்டைகளுக்கு அதிகமதேவைஉண்டு. ஆனல், இப்போது அங்கு கிடைக்கும் கடலட்டைகளை சிங்கப்பூரிலிருந்துதான் அது வாங்குகிறது. அவைகளைச் சீன நேரடியாக இலங்கையிலிருந்து பெறத்தக்க நடவடிக்கைபற்றி யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளுக்கு விஜயஞ்செய்த சீன மீன்பிடி ஆலோசனைக்குழு இலங்கை உள்நாட்டு—வெளிநாட்டு மந்திரியுடன்கலந்து ஆலோசனை செய்யவிருக்கிறது.

## குடியேறிய இளம் விவசாயிகள்

வேலையற்றிருந்த சுமார் 3,000 இளைஞர்கள் காணி—விவசாய அமைச்சினல் 39 பண்ணைகளில் குடியேற்றப்பட்டிருந்தார்கள். இப்பொழுது இவர்கள் அப்பண்ணைகளிலே மாதம்ஒன்றுக்குச் சராசரியாக 250 ரூபாமுதல் 1,000 ரூபாவரை சம்பாதிப்பதாகக் கண்டறியப் பட்டிருக்கிறது. அப்பண்ணைகளிலே நெல், காய்கறி, வெங்காயம், பழவகை, மிளகாய் ஆதியன செய்கைபண்ணப் படுகிறது.

## நெல்லின் உத்தரவாத விலை

நெல்லின் உத்தரவாதவிலை புசல் ஒன்றுக்குத் தற்போதுள்ள 14ரூபாவிலிருந்து விரைவிலே உயர்த்தப்படவிருக்கிறது. ஆனல்இது எவ்வளவாக உயருமென்று இப்போது சொல்ல முடியாமல் இருக்கின்றதாம். நெல்லின் உத்தரவாதவிலை உயரக்கூடிய சூழ்நிலை இருப்பதினல் அரிசியின் விலையும் உயருமோ என்பதுபற்றியும் சொல்லமுடியாமல் இருக்கிறதாம்.

## யாழ்நகர் லங்காசம்

இலங்கைத் தோற்பொருட் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக்கிளை (யாழ்நகர் லங்காசம) சென்ற 20-ந்தேதி திங்கட்கிழமை தபால்-தந்தி மந்திரியால் திறந்துவைக்கப்பட்டுள்ளது. தோற்பொருட் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணப் பெருந்தெருவில் 127-ம் இலக்க கட்டடத்தில் திறந்துள்ள இந்த விற்பனை நிலையத்தில் பல்வேறு காலணிகளும், பதனிட்ட தோல்களும் பிறவும் விற்பனை செய்யப்படும்.

## முத்திரை விற்க லைசென்ஸ்

முத்திரைகள், தபால் அட்டைகள், முத்திரை யிடப்பட்ட தபால்உறைகள் ஆகியனவற்றை லைசென்ஸ் பெருமல் விற்பனை செய்கிறவர்கள் எவராயினும் அவர்கள்மீது வழக்குத் தொடரப்படவிருக்கிறது. நாடு முழுவதிலும் போதிய தபால்கந்தோர்கள் திறக்கப்பட்டிருப்பதால்பொதுமக்கள் ஏனையோரிடமிருந்து அவைகளை வாங்கவேண்டிய அவசியமில்லையென்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

## சமீபமான பாடசாலைக்கே

வருகிற தைமாதம் 31ஆம் திகதியன்று ஆறுவயது பூர்த்தியடைந்திருக்கும் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் முதலாம் வகுப்பில் சேர்க்க விரும்பும் பெற்ருேர் தங்கள் வீட்டுக்கு மிகவும் சமீபமான பாடசாலைக்கு மட்டுமே விண்ணப்பஞ் செய்யவேண்டும். ஒரேவேளையில்இருபாடசாலைகளுக்கு விண்ணப்பஞ்செய்ய முடியாது. விண்ணப்பஞ் செய்யும் கடைசிநாள் வருகிற ஐப்பசிமாதம் 7-ந்தேதியாகும். முதலாம்வகுப்பில் பிள்ளைகளைச் சேர்க்கப் பரீட்சை எதுவும்நடைபெறமாட்டாது.

## பாடசாலைக் கல்வி நிதி

பாடசாலைகள்தோறும் புதிதாகக் கல்விநிதிஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இந்த நிதிக்கு அரசாங்கம் மொத்தமாக ஒருதொகைப் பணம் அளிக்கும். பெற்ருேர், ஆசிரியர், பழைய மாணவர்களும் அதற்குத் தாராளமாக நிதி அளிப்பதாலே அவர்கள்பாடசாலைகளின் வளர்ச்சியில் கூடுதலான அக்கறை எடுப்பாரகளென நம்பப்படுகிறது. பாடசாலைகளுக்குக் கூடுதலான வசதிகளசெய்ய வழிபண்ணுவதும், தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்வழங்குவதுமே இந்நிதியின் நோக்கமாகும்.

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## சத்தியவேத பாதுகாவலன்

# செவி கொடுங்கள்

இன்றைய உலகம் இரைச்சல் நிறைந்ததாகி விட்டது. எங்கும், எப்பொழுது பார்த்தாலும் ஒரே சத்தம். பட்டப்பகல் மத்தியான வேளையாயிருந்தாலென்ன, எல்லாரும் உழைத்துச் சோர்ந்துவரும் மாலை வேளையாயிருந்தாலென்ன இரைச்சலுக்குக் குறைவில்லை. வாகனங்களின் இரைச்சல், வானொலிகளின் அலறல், மனிதக் குரல்களின் ஆரவாரம்—எமது செவிப்புலன் மழுங்கிப் போவதில் ஆச்சரியமில்லை. மக்கள் நெருங்கி வாழும் இடங்களில் சில ஒலிகளைத் தவிர்க்க முடியாது என்பது உண்மைதான். தொழிற்சாலைகள், வாகனங்களின் ஓசைகளை நாம் சகித்துத் தான் ஆகவேண்டும். ஏனெனில், அவை தவிர்க்க முடியாதவை, அவசியமானவை.

ஆனால், வீடுகளிலும், வீதிகளிலும், பாடசாலைகளிலும், எமது செவிகளைத் துளைக்கும் இரைச்சலெல்லாம் அவசியந்தானா? வானொலியை உச்சஸ்தாயியில் போட்டு அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கு இடைஞ்சல் உண்டாக்குவதும், தேவைக்கு மிஞ்சிக் கூச்சலிட்டு மற்றவர்கள் அமைதியாக ஒரு காரியத்தைச் செய்ய இடையூறாயிருப்பதும் அநாகரிகச் செயல்கள் அல்லவா? வீதிகளிற் செல்லும்போது, வாகனங்களிற் பிரயாணம் செய்யும்போது, பலர்கூடும் இடங்களில் சமுகமளிக்கும்போது அங்குள்ள மற்றவர்களுக்கு இடைஞ்சலில்லாமல் நடந்து கொள்வதுதான் முறை.

இவ்வாறு தம்மாலானமட்டும் சத்தமிட்டு தம் சக்தியை விரயமாக்கியபின் பிறர் சொல்வதைக் கேட்பதற்குப் பொறுமை இருக்குமா? யாராவது கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்களா? ஒருவரிடமிருந்து கேட்ட காரியத்தை மற்றொருவருக்கு எடுத்துச் சொல்லும்போது ஏற்படும் மாறுபாடுகளைப் பார்த்தால் இது விளங்கும். எல்லோரும் பேசுகிறார்கள். கேட்பவர் ஒருவருமில்லை. ஒவ்வொருவருக்கும் தாமும் தம்முடைய பேச்சும் தான் முக்கியமாகப் படுகின்றன. மற்றவர்களைப் பற்றியோ அவர்கள் கூறுவதைப்பற்றியோ அவர்களுக்கு அக்கறை இல்லை. சற்றுப்பண்பாடுள்ளவர்களாயிருந்தால் மற்றவர் பேசி முடிக்குமட்டுமாவது காத்திருந்து தம் பேச்சைத் தொடங்குவார்கள். ஆனால், பெரும்பாலான சம்பாஷணைகளில் அவ்வாறு நடப்பதில்லை. ஒருவரை ஒருவர் இடைமறித்துப் பேசுவதும், எல்லோரும் ஒரே வேளையில் பேசுவதும் பார்ப்பதற்கு விநோதமாயிருக்கும். யாருடைய குரல் மேம்பட்டு நிற்கிறதோ அவருக்குத்தான் அதில் முக்கிய பங்குண்டு.

வீட்டிலும் இதே நிலைதான் என்றால் அது வருந்தத்தக்கதாகும். ஒருவர் தனது எண்ணங்களையும் உணர்வுகளையும் தடையின்றி வெளியிடக்கூடிய இடமாக இல்லம் அமைய வேண்டும். அங்கும் ஒருவரை ஒருவர் பேச்சால் அடக்கிவிட்டுப் போகிற நிலைமை ஏற்பட்டால் குடும்பத்தினருக்குள் அந்நியோன்னியமான உறவு எங்ஙனம் இருக்க முடியும்? ஒருவருக்குப் பெரிதாகத் தோன்றுவது மற்றவருக்கு அற்பகாரியமாக இருக்கலாம், ஒருவரது புது அனுபவம மற்றவருக்குப் பழம்பாடமாக இருக்கலாம். ஆயினும் அதைக் கரிசனையோடு கேட்பதுதான் தமது அன்பை வெளிப்படுத்தும் வழியாகும்.

வீட்டிலே ஆரம்பிக்கும் இந்தப் பரஸ்பர அன்பு, மற்றவருடைய காரியத்தில் கரிசனையெடுத்து அவர்கள் பேச்சுக்குச் செவிகொடுப்பது, அவர்களுக்கு இடைஞ்சலில்லாத விதத்தில் நடந்து கொள்ளுவது,—இப்பழக்கங்கள் வர வர விரிவடைந்து உறவினர், நண்பர்மட்டிலும், தாம் தொடர்பு கொள்ளும் பிறர் மட்டிலும் அவ்வாறே நடந்து கொள்ளத் தூண்டும். அப்போது வீண் இரைச்சல்கள் எவ்வளவோ குறையும்.

"மக்களுக்குப் புரியும்படியும், அவர்களைக் கவரும்படியும் உண்மையைப் பரப்பும் ஆக்கம் திரைப்படத்திற்கே உரியது. ஒப்புயர்வற்ற மனித சமுதாயத்தை உருவாக்குவதில் உறுதுணையாவதும் அதுவே ... ... ஆனால், தரங்கெட்ட திரைஓவியங்களின் அழிவுச் சக்தியோ அளவற்றது; நமதுபள்ளிகளின் முயற்சி கத்தோலிக்க சேவை உறுப்பினரின் பணி, ஏன், குருக்களின் தொண்டு ஆகிய அனைத்தையுமே பயனற்றதாக்கவல்லது."

—12ஆம் பத்திநாதர்

# லூர்துபதி ஆரோக்கியம் பற்றிய தந்திச் சமாச்சாரம்

"பிரான்ஸ் தேசத்திலுள்ள ரோமான் கத்தோலிக்க திருசேத்திரமாகிய லூர்து திருப்பதியை ஒரு நாள் தரிசித்துவிட்டுத் திரும்பியதைத் தொடர்ந்து ஆறுவயதுடைய ஒரு பெண் பிள்ளைக்கு உண்டாயிருந்த 'கான்சர்' எனப்படும் புற்றுநோய் குணமடைந்தமையானது ஓர் அற்புதமேயென்று இங்குள்ள (ஸ்கொட்லாந்துதேச கிளாஸ்கோநகர்) டக்றர்மார் இன்று (சனிக்கிழமை) நிச்சயித்திருக்கிறார்கள்" எனத் தந்திச் சமாச்சாரம் கிடைத்துள்ளது.

"இற்றைக்கு மூன்றுவருடங்களின் முன்னர் கிளாஸ்கோ நகரைச்சேர்ந்த திருமதி டெய்ட்றே பேண்ஸ் என்ற பெண்ணுக்கு அப்போது மூன்று வயதுடையவளாயிருந்த பிரான்செஸ் என்ற அவளுடைய மகள் குணமடைவதில் நம்பிக்கையில்லையென்று சொல்லப்பட்டது. அதனால் திருமதி பேண்ஸ் தனது மகளை லூர்து திருப்பதி கொண்டு செல்லத் தீர்மானித்தாள். அங்கே ஆரோக்கியத்தை வேண்டி ஆயிரக்கணக்கான நோயாளர்கள் நாடிச் செல்லுகின்ற அற்புத திருநீரூற்றுத் தண்ணீரில் அப்பிள்ளை இருதடவை குளிப்பாட்டப்பட்டாள்.

"பின்னர் அங்கிருந்து பிரித்தானிக்குத் திரும்பியதும் எவருமே காணக்கூடியதாய் அவள் குணமடைந்தாள். அவள் அடைந்துள்ள அற்புத ஆரோக்கியத்தை இன்றைய வைத்திய அறிவுக்கு முன் விளங்கிக்கொள்ள முடியாதென டக்றர்மார் தெரிவித்தார்கள்.

"பிரான்செஸ் குணமடைந்தமை புதுமையானதென்று உள்ளபடியே விபரித்துக்கூற முடியுமென்று ஸ்கொட்லாந்திலே லக்பாங்க் நகரிலுள்ள நோய்வாய்ப்பட்ட பிள்ளைகளின் ஆஸ்பத்திரியின் ஆலோசகரான திரு. ஸ்ருவாட்மான் அவர்கள் கூறியுள்ளனர். இந்த ஆஸ்பத்திரியிலேயே பிரான்செஸ் ஒரு பிணியாளியாக இருந்துவந்தாள்.

"லூர்து திருப்பதி வைத்திய கருமசாலையின் அதிபரான டக்றர் அல்போன்ஸ் ஒலிவியெறி அவர்கள் இது விஷயமாய்ப் பேசியபோது, "ஒரு பத்து வருட காலத்தில் ஏறக்குறைய ஒருமுறை மட்டும் ஏதோ ஒன்று நடக்கின்றதென்று அற்புதமாக நிருச்சயை சொல்லக்கூடியதாகும்; அச்சந்தர்ப்பங்களிலே இதுவும் ஒன்றென்று நாம் திருப்தியடைந்துள்ளோம்" எனத் தெரிவித்திருக்கின்றார்.

## சேனை பொன்விழாப் பொருட்காட்சி

உலகில் மரியாயின்சேனை ஆரம்பமாகி 50ஆண்டுகளின் நிறைவையொட்டிய பொன்விழா கொண்டாட்டங்களின் விசேட சிறப்பு நிகழ்ச்சியாக ஒரு பொருட்காட்சி ஐப்பசி 17-ம், 18-ம் தேதிகளில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற இருக்கின்றது. இப் பொருட்காட்சியில் துறவற, இல்லற அப்போஸ்தல அழைத்தல் பற்றிய அம்சம் பிரதான இடம்பெறுகிறது. யாழ். மேற்றிராசனம் அடங்கலுமுள்ள மரியாயின் சேனையாளர் ஆயத்த வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அனைவரும் அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

## பூசை வழிகாட்டி

### ஐப்பசி — 1971.

3. ஞாயிறு : ஆண்டின் 27-ம் ஞாயிறு [ப]
1-ம் வாசகம் : அபாக், 1 : 2—3, 2 : 2—4.
2-ம் வாசகம் : 2 திமோ. 1 : 6—8, 13—14.
சுவிசேஷம் : லூக். 17 : 5—10.

4. திங்கள் : புனித பிரான்சிஸ் அசிசியார் [வெ]
வாசகம் : கலா. 6 : 14—18
சுவிசேஷம் : மத். 11 : 25—30.

5. செவ்வாய் : நாள் பூசை [ப]
வாசகம் : யோனு. 3 : 1—10.
சுவிசேஷம் : லூக். 10 : 38—42.

6. புதன் : நாள் பூசை [ப]
வாசகம் : யோனு. 4 : 1—11.
சுவிசேஷம் : லூக். 11 : 1—4.

7. வியாழன் : புனித செபமாலை அன்னை [வெ]
வாசகம் : 2 அரச. 7 : 1—5, 8—11, 16.
சுவிசேஷம் : லூக். 1 : 26—28.

8. வெள்ளி : நாள் பூசை [ப]
வாசகம் : யோவே 1 : 13—15, 2 : 1—2.
சுவிசேஷம் : லூக். 11 : 15—26.

9. சனி : நாள் பூசை [ப]
வாசகம் : யோவே. 3 : 12—21.
சுவிசேஷம் : லூக். 11 : 27 — 28.

ஆசிரியருக்குக் கடிதம்:

கனம் பத்திராதிபர்,
சத்திய வேத பாதுகாவலன்,
யாழ்ப்பாணம்.

## சென்று வாருங்கள் பூசை முடிந்தது

அநேகமாக நமது ஆலயங்கள் யாவற்றிலும் குருமார் சில தருணங்களில், ஆயர்கள் கூட திருப்பலி முடிந்ததும், "சென்று வாருங்கள் பூசை முடிந்தது" என்று மக்களை நோக்கிக் கூறுவதைக் கேட்கிறோம்.

பீடத்தில் திருப்பலி நிறைவேறியதும், பூசை முடிந்துவிட்டதா! பலநூல்களிலிருந்து நான் வாசித்ததில் இருந்தும், சில குருமாருடன் இது பற்றிச் சம்பாஷித்ததில்இருந்தும் பலி, பூசையுடன் முடிந்து விடுவதில்லை; வாழ்வுமுழுவதும் தொடர்கிறது. நமது வாழ்வே பலிபூசைதான் என விளங்கினேன்.

"முடிந்தது கல்வாரி பூசைப்பலி; இனித் தொடர்வது நம் வாழ்க்கைப் பலி" என்றும் பாடக்கேட்கிறோம்.

ஆகவே, "பூசை முடிந்தது சென்று வாருங்கள்" என்று கூறுவது சரியா? தயவுசெய்து நமது வாசகர்கள் யாராவது இதைத் தெளிவு படுத்துவார்களா?

பொ. இராமலிங்கம்
மட்டக்களப்பு.
23-9-71.

## ஆயுள்வேத ஆஸ்பத்திரி

கைதடியிலே சுமார் பத்து லட்சம்ரூபாசெலவில் அமைக்கப்பட்டுவரும் ஆயுள்வேத ஆஸ்பத்திரிக் கட்டடவேலைகள் பூர்த்தியடையும் தறுவாயில் இருக்கின்றன. அதனால் இவ்வருட இறுதிக்குள் அது திறந்துவைக்கப் படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக்பிறஸ்." யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.